உளி 1 | ஓசை 27 | ஏப்ரல் 2019 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



**ஆசிரியர்:**
ஜின்னா அஸ்மி

**நிர்வாகக் குழு:**
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்

**ஆசிரியர் குழு:**
படைப்பு தேர்வுக்குழுமம்

**முகப்பு ஓவியம் & வடிவமைப்பு:**
முகம்மது புலவர் மீரான்

**உள் ஓவியங்கள்:**
கொ.வடிவேல்
அழ.ரஜினிகாந்தன்

**இணையதள முகவரி:**
www.padaippu.com

**அலுவலக முகவரி:**
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
மதுரை வீரன் நகர் ,#8
கூத்தப்பாக்கம்,
கடலூர்,
தமிழ்நாடு,
இந்தியா.
607002
admin@padaippu.com
9469375575

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை.
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| பெயர் | பக்கம் |
|---|---|
| தனபால் பவானி | - 04 |
| காயத்ரி | - 05 |
| கோபி சேகுவாரா | - 06 |
| ஜானு இந்து | - 07 |
| கார்த்திகா | - 08 |
| கட்டாரி | - 09 |
| கார்த்திகேயன் மாகா | - 10 |
| நஸ்புள்ளா ஏ | - 11 |
| பழனி பாரதி | - 11 |
| நயினார் | - 12 |
| ஜி ராஜன் | - 13 |
| க ராஜகுமாரன் | - 14 |
| ராம் பெரியசாமி | - 15 |
| ரிஸ்கா முக்தார் | - 16 |
| சக்தி அருளானந்தம் | - 17 |
| சரண்யாசத்தியநாராயணன் | - 17 |
| சிராப்பள்ளி ப மாதேவன் | - 18 |
| சௌவி | - 19 |
| கோ ஸ்ரீதரன் | - 20 |
| தங்கேஸ் | - 21 |
| குபசிவபாலன் | - 22 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| ரா ராஜசேகர் | - 23 |
| கவின் முருகு | - 24 |
| சூர்யநிலா | - 25 |
| குறிஞ்சி நாடன் | - 26 |
| சந்துரு | - 27 |
| டீன்கபூர் | - 28 |
| நிலாரவி | - 29 |
| மு இளையா | - 30 |
| யாழ்ஜீவி | - 31 |
| கவிஜி | - 32 |
| பிரேம பிரபா | - 33 |
| ஜி.சிவக்குமார் | - 34 |
| ஐ.தர்மசிங் | - 34 |
| ஆனந்த் | - 34 |
| மு.முகமது ஃபாருக் | - 35 |
| மதுரா | - 36 |
| மு.பே.சத்தியநேசன் | - 37 |
| சே தண்டபாணி | - 38 |
| மீனு | - 39 |
| ரமேஷ் கலை மித்ரன் | - 39 |

# வெறுமை சூழ்ந்த வீடு

**கொடியில்** உலரும் உடைகளில்
உரசிக்கொண்டிருந்த காதலை
ஈரம் காயாமல் மடித்து வைத்த அலமாரியில்
அந்த புன்னகையும் இருக்கவே செய்கிறது

விடைபெறும் நேரக்
கையசைப்பில்லாதா மாடியை
எத்தனை முறைதான்
திரும்பித் திரும்பிப்பார்ப்பது

தண்டவாளம் கடக்க
நேர்கையில் வந்து மோதும்
நினைவுகளின் ரயிலில்
உடைவதற்கு பதிலாக
மீண்டும் பிறக்க முடிகிறது


முடியாத பகலொன்றை
தொடங்காத இரவொன்றை
யாசிக்கும் மனதிலிருந்து
வெளியேறும் ஆசையொன்றை
ஏமாற்றங்கள் ஒன்றுகூடி
கேலி செய்கின்றன

வெட்டியெறியப்பட்ட மரத்திலிருந்து
தெறித்து விழுந்த பறவையின்
கூட்டைப்போல அத்தனை வெறுமை
சூழ்ந்திருக்கிறது
அவள் இல்லாத வீடு



ஓவியம் : கொ.வடிவேல்


தனபால் பவானி...



ஓவியம் : கொ.வடிவேல்

நமக்கிடையேயான
தருணங்களைக் கோர்த்து
அவ்வப்போது
பகிர்ந்தபடியிருக்கிறேன்
இவை நானுனக்குச் சொல்வதா
எனக்கு நானே சொல்லிக் கொள்வதா
எனும் தெளிவின்றி
புற்றீசலாய் இத்தனை தருணங்களாவென
சற்று மலைத்துப் போகிறேன்
அவ்வப்போது யார் நீயென
மறதி நோய்க்காரியாய் வியப்பிலாழ்கிறேன்
விழிவழியோ குரல்வழியோ என்னை
ஆட்கொண்டபடியிருக்கிறாய்
பேசித்தீர்க்கவியலாப் பெருஞ்சுமை
என் குரல்வளையில்
மாயவிசை கொண்டெனை
ஆட்டிப் படைக்கிறாய்
புவியீர்ப்பை வெல்லுமொரு
விதியீர்ப்பு நீ.

காயத்ரி...



ஓவியம் : கொ.வடிவேல்

எளிதில் யாரும் வந்துவிட முடியாத
தூரத்தில் இருக்கிறேன்
ஒரு அன்னிய இடத்திலிருப்பது போல்
எனக்கே சந்தேகமிருக்கிறது
எளிதில் யாரும் கவனித்துவிட முடியாத
மிக தூரத்தில் தான் இருக்கிறேன்
செறிவூட்டபட்ட நஞ்சை போல்
என்னிடம் சில சொற்கள் இருக்கிறது
மனமுடைந்து கதவடைத்துக்கொண்டு
அன்பு பிசகாமலிருக்கும்
சில பிரமைகள்
அவ்வளவு பிரியமாக இருக்கிறது
மரணம் பயில திட்டமிடல் ஏதும்
வேண்டாம்
அன்பின் நெடுந்தூரத்தை பலவந்தமாக
பார்த்துக்கொண்டிருக்கிறேன்

கோபி சேகுவேரா...



ஓவியம் : கொ.வடிவேல்

**நிஜங்கள்** சுடுகின்றபோது
சாதுர்யமாய் தங்களைப் புதுப்பித்துக்
கொள்கின்றன பொய்கள்

எல்லாவற்றிலும் ஒரு கணக்கு
எல்லாம் ஒரு பண்டமாற்று
அன்பெனப் படுவதற்குள்
அத்தனையும் அடக்கம்

புகழுரைகளின் புன்னகைகள்
நிரந்தர முகமற்றவை
இகழ்கின்ற முகத்தில் மின்னும்
கண்களில் அடங்கமறுக்கின்ற குரூரம்

பழிக்கின்ற குரல்களின் பெரும்பான்மையில்
நீர்த்துப்போக விரும்பாத மௌனத்தை
இரக்கமற்றுக் கீறுகின்ற தன்முனைப்பின்
மீது சூடப்பபட்டிருக்கும் கிரீடம்
சற்றும் பொருந்திப் போகவில்லை

இங்கு பாதை வேறு பயணம் வேறு
இன்னொருவர் பாதைவழி பூக்களை
தூவாவிட்டால் பிழையொன்றுமில்லை
முட்களை தூவாமலிருத்தல் நலம்

எதிரெதிர் சந்திக்க நேர்கையில்
பரிமாறிக்கொள்ள மிச்சமிருக்கட்டும்
சில புன்னகைகளேனும்...

ஜானு இந்து...



ஓவியம் : கொ.வடிவேல்

## சிறுவயதுதில்..

பயம் அறியாது
அடம்பிடிப்பேன்.

அம்மா..
என் பின் ஓடியே
பாதி மேனி
களைத்துப் போவாள்.

அப்பாவின்..
அதட்டல்களை சிரித்தே
சமாளிக்கும் திறன் எனக்கு.

மைதிலி..
பக்கத்து வீட்டுக் குழந்தை
அருகே வரவே பயப்படும்.

பள்ளியில் பிள்ளைகளுடன்
சண்டையிடாத நாட்களே
இல்லையெனக் கூறலாம்.

காரோ..பைக்கோ
புது வாகனங்களில்
கோடிடாமல் தூக்கம் வராது.

பொம்மையைக் கட்டி
தூங்கியதாய் நினைவில்லை
அம்மாவின் அணைப்பிலே
உறங்கிக் கிடப்பேன்.

இப்போதெல்லாம் என்னைக்
கெட்டிக்காரியெனப் பாராட்டுகிறார்கள்..
நான் வளர்ந்து விட்டேனாம்....

#ஏக்கம்.

**கார்த்திகா...**



ஓவியம் : கொ.வடிவேல்

**அரைச்சல்லி** கொட்டுனாப்புல சத்தம்
முக்குல திரும்புறப்பவே
கேட்டுக்கிருக்க....
எதுக்கோன்னு இனம்புரியாத
ஆனந்தம் தொத்திக்கிரும்.....
வளர்ற புள்ளைக்கி
கொஞ்சம் எறக்கமா வச்சித்
தாங்கண்ணேன்னு அம்மா
கேட்டதுக்கெல்லாம் சிரிச்சிக்கிட்டே
அளவெடுத்து வச்சிட்டு
நாலுநாள் கழிச்சு வரச் சொல்லிருவாப்ல...
வயக்காடு வேல போக
மீந்த நேரம்
சல்லிச்சத்தம் கேக்குறப்பல்லாம்
நம்ப டவுசரா இருக்காதோன்னு
நப்பாசையில ஓட.....
ஏதோ ஒரு சாக்கெட்டோ பட்டாபட்டியோ
மிசினுல பொரளும்....
பொங்கி வார கோவத்த
ஒத்தச்சிரிப்போட ரெண்டு நாள்
கழிச்சி வாரும் மாப்புளயிலயே
சரி பண்ணிருவாப்புல.....
ரெண்டு நாள் கணக்கு இருவது
நாளாக்கி...
வெடப்பா நிக்கிற ஒரு
கால்ச்சட்டைய போட்டுப் பாக்கச் சொல்லி...
வளர்ற புள்ளையாமா நீங்கன்னு
நக்கலோட குடுக்குற காசை
வாங்கிப் போட்டுக்குற
டைலருகளதா..... எம்புட்டுச்
சுளுவாத் தொலச்சிட்டம்........

கட்டாரி....

**வாளிப்புகளில்** முகம் பார்த்துக்கொள்ளும்
வெயிலில் தான் தலைதுவட்ட விரும்புகிறது
காமம்

ஆட்டுக் குருதியில் கழுவப்பட்ட கத்தியின்
மனதை விட்டத்தில் சொருகவைத்தது
வாழ்வின் கணங்கள்

திருகுதனில் தப்பித்த வரகு
முளைவிட்ட துளிர்களில் மின்னுகிறது
ஆதியின் பசுமை

திரைச்சீலை கீழ்த்தெரியும் கணுக்காலில்
ஆடற்கலை ஒளிந்துகொள்ள நாடகக்கணிகை
தன் உதட்டுச் சாயத்தால் நிலம் சிவக்க
வைக்கிறாள்

அச்சிவப்பை உள்வாங்கி விடியல் வருகையில்
தேநீரகத்தில் சுருட்டுப்புகைக்கு கண்ணைக்
கசக்கிக் கொண்டு நடுத்தெருவில் அலைகிறது
சூரியன்

**கார்த்திகேயன் மாகா...**



ஓவியம் : கொ.வடிவேல்

பொம்மைகளைச் சுமந்த படி
பறக்கிறாள் குழந்தை
அவளோடு சேர்ந்து
பறவைகளும், மேகங்களும் பறக்கின்றன
பொம்மைகள் பேசத் தொடங்கின
பறவைகளும், மேகங்களும் பேசத்
தொடங்கிய போது
வானம் முழுவதும்
சொற்கள் வசிக்க தொடாங்கின
குழந்தை கடவுளிடம்
இன்னும் சிறகுகள் வேண்டினாள்
குதிரைகள் பறந்து வந்து
குட்டி குட்டியாய் சிறகுகள் தந்தன
அவள் இரவு முழுவதுமாய்
மேலும் பறக்கத் தொடங்கினாள்.

நஸ்புள்ளா ஏ....




ஓவியம் : கொ.வடிவேல்

மறைவற்ற உன் அழகு
பிரபஞ்சத்தின் கீச்சுக் குரலில்
என்னைக் கேட்கிறது

பவளமல்லிகைகள் ஏன்
பிரம்ம முகூர்த்தத்தில்
அவிழ்கின்றன.

பழநிபாரதி....



ஓவியம் : கொ.வடிவேல்

**பூப்பெய்திய** மகள்
நீராடி வருவதை
பார்ப்பது போல்
மழையில் நனைந்து வரும்
இந்த இரயிலை
பார்க்கிறார்கள் மக்கள்.
சுட்டரிக்கும் வெயிலில்
சுருண்டு கிடக்கும்
இராமநாதபுரத்திற்கு
சிவகங்கையில் பெய்த
மழையை அழைத்து வந்து
காட்டுகிறது இரயில்.
எங்களூர் மாடசாமியை
மடக்கிப் பிடிப்பதுபோல்
பயணச்சீட்டில்லாமல்
வந்த மழைத்துளிகளை
கேள்வி கேட்கவா முடியும்.
அட இந்த மழை
இங்கே பெய்யலியே..
என இரயிலில்
ஏறியவர்கள் வருத்தப்பட்டார்கள்
நல்லவேளை
இங்க மழையில்லை என
இறங்கியவர்கள்
சந்தோசப்பட்டார்கள்.
ஒலியெழுப்பியது.. இரயில்.
எனக்கு அது சிரிப்பது
போலவே இருந்தது.

நயினார்...

# ஜன்னலோர இருக்கை

ஓவியம் : கொ.வடிவேல்

குடைகளும்
கைகுட்டைகளும்
மஞ்சப்பைகளும் ஓடிபிடித்து
பேருந்து திரும்பி நிற்கும் முன்னரே
முன்பதிவு செய்து விடுகின்றன
ஜன்னலோர இருக்கைகளை..

காலியான பேருந்தில்
இசை நாற்காலி விளையாட்டு..
முதலில் நிரம்பும்
ஜன்னலோர இருக்கைகள்..
அடம்பிடிக்கும்
குழந்தைகளாலும்
வாந்தியின் கழிவிரக்கம்
பெற்ற பெரியவர்களாலும்
சிலசமயம் ஆக்கிரமிக்கப் படுகின்றன..

புதுமாப்பிள்ளை
தன் மணவாட்டிக்கு
தாஜ்மகால் பரிசைப்போல்
ஜன்னலோர இருக்கையளிக்க
பாதுகாப்பும் காதலும் தியாகமும்
அங்கு உறுதி அளிக்கப்படுகின்றன..

ஜன்னலோர
இருக்கைக்காரனிடம்
தனக்குள்ள பொறாமையை
தூங்கித் தூங்கி விழுந்து
வெளிப்படுத்திக் கொள்கிறான்
பக்கத்து இருக்கைக்காரன்..

மழையும் வெயிலும்
சீண்டும்போதெல்லாம்
இறுகிப் போன கண்ணாடி ஜன்னல்
மேலும் கடுப்புக்கு ஆளாக்குகிறது
ஜன்னலோரப் பயணியை..

இளநங்கையானால்
கண்ணாடி ஜன்னலை
திறக்கவும் மூடவும்
உதவிட நூறு கைகள் முன்வரும்..

காற்று வந்தால்
மூடச் சொல்லியும்
மூடியிருந்தால்
திறக்க சொல்லியும்
பின்னிருக்கை ஆணைகள்..

சேர வேண்டிய
இடத்துக்கு இன்னும்
ஒரு நிறுத்தம் இருக்கையிலே
ஜன்னலோரம் கிடைத்து விட்டாலும்
சிறிது தூரமேனும்அனுபவிக்க
முன்வரும் முதியவர்கள்..

அதோ வந்துவிட்டது பேருந்து..
கண்களும் கால்களும்
அலைபாய்கின்றன
ஜன்னலோர இருக்கை தேடி..

ஜி ராஜன்...



ஓவியம் : கொ.வடிவேல்


நாகரீகம் வளர்ந்தபிறகு
கண்ணியத்தின் கால்கள்
வழி மறந்துவிட்டது..!

செல்வக கையடக்க ஒளித்திரைக்குள்
சிக்கிக்கொண்ட இந்த உலகம்
நிர்வாணங்களை எதைகொண்டும்
மறைக்கமுடியவில்லை..!

கிருஷ்ணர்கள் கௌரவர்கள் பக்கம்
இருக்கிறார்கள்..
பாண்டவர்கள் முகத்திரைகள் வழியெங்கும்
முகவரியற்று அலைகிறது..!

தனியானதொரு தீவில் நிற்கிறேன்
கடவுளின் கட்டளை காதில் விழுகிறது
நல்லவரை தேர்ந்தெடுக்கவேண்டுமாம்..!

க.ராஜகுமாரன்...



ஓவியம் : கொ.வடிவேல்

**உலகத்தின்** ஒட்டுமொத்த
வாசனையில் கலந்திருக்குமான
உயிர் மூச்சினை நீவிச் செல்லும்
தன்மான பிறழ்வுகளின்
பிளவுகளில் தேங்கி நிற்கிறெதென்
உள்ளிழுத்து விடும் மூச்சின்
சமங்குல விகிதம் ....

மெனக்கிட மிருகேற்றும்
தன்னல எச்சங்களை
பொருக்கித்திங்கும்
தன்னார்வ உணர்வுகளை
இழிவுகளுள்ளாக்கும்
யாரேனும் யொரு நாழிகைக்குள்
கண்ணாடிப்பேழையை
பார்த்திருக்கக்கடவும் ....

எதிலும் தர்க்கமென திரியும்
உடற்சுவையின் பிளவை
எங்கேனும் சிதைத்திருக்கும்
பிளவுகளின் வடிவிற்குள் ...

நீயாரென்பதை
நீ பிறப்பதற்கு மன்
அறிவித்த மனிதர்களின்
கழிவுகளில் பேரன்பென
கொள்வாய் ...

ராம் பெரியசாமி...



ஓவியம் : கோ.வடிவேல்

# இது நேசம் தானென ஒப்புக்கொள்!!

நீ தொலைத்த புன்னகைதனை
நான் தேடித்தருகிறேன்..
நீ மறக்கத்துடிக்கும் பெருஞ்சோகமொன்றை
நான் மறக்கச் செய்கிறேன்..
நீ பாதிவழியே விட்டு வந்த கனவொன்றை
நான் மீட்டுத் தருகிறேன்..

இது நேசம் தானென ஒப்புக்கொள்!!

உன் துன்பம் தோய்ந்த பக்கங்களை
நான் எரித்து விடுகிறேன்..
உன் சாலைதனில் உதிரா விண்மீன்களை
நான் பூக்கச்செய்கிறேன்..
இன்னும் புறக்கணித்தவர்களையும்
புன்னகைத்துக் கடக்க
நான் கற்றுத்தருகிறேன்..

தவிர
இந்த இரவுகள் வெறுமையிலானவை..
இந்த விடியல்கள் சாபம் சுமந்தலைவன..
இந்த உலகமோ வெறும்
பொய்களாலானது!!

இது நேசம் தானென ஒப்புக்கொள்!!

உன் இரவுகளை கனவுகளால் நிரப்பித்
தருகிறேன்..
உன் விடியல்களை புன்னகையால்
உயிர்ப்பித்து நகர்கிறேன்..
மேலும் உன் உலகத்தை
மெல்லிசைக் கொண்டு மலர வைக்கிறேன்..

நேசமென்பதொரு கலை
நேசமென்பதொரு கனவு
நேசமென்பதொரு மெல்லிசை..

எனினும்
உண்மையில்..
உன் நேசமற்ற பொழுதுகள்
நரகத்தை அணுகுபவை..

அதற்காகவேனும் ஒப்புக்கொள்..
இது தான் நேசமென!!!

ரிஸ்கா முக்தார்...

பிடிபட்ட மீன்
விற்பனைக்கு காத்திருக்கிறது
உயிரின் வாதை
உறைந்த கண்களில்

சக்திஅருளானந்தம்...



ஓவியம் : கொ.வடிவேல்

பல நேரமாக
அழுது
கொண்டேயிருக்கின்றாள்
அவள்
ஏன்...?
எதனால் ...?
எதற்காக...? என்ற
கேள்விகளை யாரேனும்
அவள் பக்கத்தில்
உட்கார்ந்து
கேட்க மாட்டீர்களா..

குமுறுகின்றது
நான்கு பக்க சுவர்...

சரண்யாசத்தியநாராயணன்...

# மௌனம்

ஒரு நொடி ஒளிர்ந்து மறைந்த
அந்த
மின்னலின் வெளிச்சத்தில்
கண்ணில் படுகிறது,
மனதுக்குள் கிடக்கும்
மௌனக் குவளை.

அது
சொற்களால் நிரம்பிக்கிடக்கிறது;
ஒரு பெருவெடிப்பின்
வருகைக்காய்.

மின்னல் வீசியெறிந்த
மன்னிப்பின் மலர்கள் பட்டு
உடைந்த குவளையிலிருந்து
ஒழுகுகின்றன சொற்கள்,
வேறு வேறு கோடுகளில்.

மௌனம் நடந்துசென்ற
தடம் அறிய
சொற்களுக்குத் தெரிவதில்லை.

ஆனாலும்,
எல்லா மௌனங்களின்
உள்ளேயும்
சொற்களே காத்துக்கிடக்கின்றன.



ஓவியம் : கொ.வடிவேல்

சிராப்பள்ளி ப.மாதேவன்...



ஓவியம் : கொ.வடிவேல்

**இந்த** வாசனையான இரவு
தூங்க வேண்டாமென
எனைக் கைப்பிடித்து
அமைதியான வீதிகளின் வழி நடத்தி
எங்கோ கூட்டிச் செல்கிறது

உறங்க எத்தனித்த கணத்தில்
திறந்து வைக்கப்பட்ட சன்னல் வழியாக
வாகைப்பூக்களின் வாசத்தோடு
உள்ளே நுழைந்த இரவு
என்னை மெதுவாய்த் தட்டியெழுப்பியது
மற்றவர்கள் யாரும் எழுந்துவிடக்கூடாதென

பகலில் அத்தனை பரபரப்பாயிருக்கும்
சாலைகள்
அவ்வளவு அமைதியாயிருக்கின்றன
அமைதியினை அனுபவித்திக்கொண்டிருக்கும்
மரங்கள்
இலேசாக நடனமாடிக்கொண்டிருக்கின்றன
கொஞ்சமே கொஞ்சம் மதுவருந்தி
கொஞ்சமே கொஞ்சம்
போதையேறியவனைப்போல

மரங்களுக்கடியில்
ஒட்டி ஒட்டிப் படுத்தபடி
மாடுகள் தூங்கிக்கொண்டிருக்கின்றன
தலையை உடம்புக்குள் வைத்து
வெகு நிம்மதியாக
நாய்கள் தூங்கிக்கொண்டிருக்கின்றன

மாடுகளின்மீது மேய்ந்துகொண்டிருக்கும்
நட்சத்திரங்களின் வெளிச்சத்தில்
நாய்களின் கனவுகள்
நடனமாடிக்கொண்டிருக்கின்றன

கொஞ்சம் நின்று பார்த்த என்னை
எதையும் சலனப்படுத்த வேண்டாமென
என் கைகயைப் பிடித்து
வாகைப் பூக்களின் வாசம் நிறைந்த இரவு
அழைத்துக்கொண்டே போகிறது
இந்த வீதிகளைத் தாண்டி
இந்த மாநகரத்தைத் தாண்டி
பேரமைதியின் மெல்லிய இசையோடு

சௌவி...

**வெட்டபடும்** தலைக்காக
காத்திருக்கிறது
மீனங்காடி வாசல்நாய்..

~~~

ஊர் கொண்டாடுகிறது
ரத்தம் கசியும் குழந்தையை
காதுகுத்து வைபவம்..

~~~

அமர முடியவில்லை
மூக்கின் மேல்
ஒற்றை காலிழந்த மூக்குகண்ணாடி..

~~~

கழுத்து கழண்டு கிடக்கிறது
சமுத்திர கரையில்
நீத்தார் எலும்பிருந்த பானை..

~~~

முருகர் தலைமேல்
பாம்பை பிய்க்கிறது
கோபுர சிலைமேல் மயில்....

~~~

வேட்டி கிழித்து
அடுப்பு குண்டானில்
வேகும் இட்லிக்கள்....

~~~~

பூனை குறுக்கிட்டபோதும்
தடையாகவில்லை
தூக்கு தண்டனை

~~~~

பற்கள் பொடியாயின
மூன்று ரெக்கைகளிடையில்
மிக்சியில் பூண்டுப்பொடி....

கோ ஸ்ரீதரன்...



ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்
~~~~



ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

# இருளின் மடியில்

குழைத்து வைத்த தீற்றலாய்
அப்பிக்கொள்கிறது மரமெங்கும்
இலைகள் தங்களை பூசிக்கொள்கின்றன
கைதொட்டு

மடல்விடும் மொட்டிலிருந்து
வெளியேறும் வெளியும்
இருளும்
பயணிக்கின்றன அலையலையாய்
எல்லையின்மையின் வெளிதனில்

இருளில் பரவும் உருவங்கள் யாவும்
கருந் திரவமாய் கரையும் வேளையில்
உயிர்களை வித்திடும் கருவறை திறக்கிறது
இரவின் மடியில் பால் சுரக்கிறது
அருந்தித்திளைக்கின்றன
மலர்ந்தபூக்கள்

மொட்டுக்களுக்குள் சுடர்விடுகிறது
கருஞ்சுவாலை ஒன்று

பேதமற்ற அன்பினாலும்
பேருவகை கொண்ட தழுவலினாலும்
சகலஜீவன்களையும் தனதாக்குகிறது அது


நித்திரையின் வழியே
கருவறைக்குள் சிசுவாக குழைகின்றன
உயிர்கள் யாவும்

வெறுக்கிறேன் வியக்கிறேன்
ரசிக்கிறேன்
என்னை நானே யாரென அறிந்து
அதிசயக்கிறேன்
பல்கிப்பெருகி சுயமாய் பிரசவிக்கிறேன்
என்னை

இன்று
என்னை மீட்டிவிட்டுப்போன
விரல்களிலிருந்து இருள்
சொட்டுச்சொட்டாய் வடிகிறது
சிலுவையிலிருந்து கசியும் குருதியென

கண்கள் மூடி
கருவறைவாசனையை
தினமும் சுகிக்கிறேன் நான் பின்பு
இருள்யோனியின் வழி இறங்கி
சூன்யத்தில் விழுகிறேன்

**தங்கேஸ்...**



ஓவியம் : கொ.வடிவேல்

**வட்டமாக** சப்பாத்தி தேய்க்கும்
முயற்சியில்
எப்போதும் நான்
தோல்வியையே தழுவி வருகிறேன்...

சப்பாத்தி வட்டத்தின் ஆரம் எவ்வளவு
என ஆராய முற்படுகையில்
கூகுள் கையை விரித்தது...

என் சப்பாத்திகளை வட்டமாக தேய்க்க
செக்கு மாடாய் சப்பாத்திக் கட்டையை
சுற்றிச் சுற்றி வந்து தேய்த்த போதும்

என் சப்பாத்தி
பாரமீசியத்தின் வடிவத்தில்
உள்ளதெனவும்....
கை தவறி கொட்டிய
பெயிண்ட் சிதறல் போல இருப்பதாகவும்...
ஒடுக்குமுறைக்கு எதிரான
பின்நவீனத்துவ ஓவியமெனவும்...
மத்திய ரோம் நாட்டிலுள்ள
டிரான்சில்வேனியாவை
நினைவுபடுத்துவதாகவும்....
பலர் அவ்வப்போது
தங்களின் கருத்துக்களைச் சொல்வார்கள்...

ஆனால்
வட்டமாக சப்பாத்தி தேய்ப்பது
எப்படியென
இதுவரை யாருமே சொன்னதில்லை...

மீண்டும் சப்பாத்தியை
வட்டமாக நான் தேய்க்க முயன்றேன்...

வட்டச் சப்பாத்திகளைப் போலவேதான்
எனது கோணல் மாணலான சப்பாத்திகளும்
என் பசியைப் போக்கின...
பிறகெதுக்கு வட்டம்?

என் சப்பாத்திகள்
இன்று என்ன வடிவத்தில் இருக்கின்றன?
நிச்சயம் யாராவது சொல்வார்கள்...

நான் வழக்கம் போல
என் ஒழுங்கற்ற சப்பாத்திகளை
மனநிறைவோடு தேய்த்துக்
கொண்டிருப்பேன்...

குபசிவபாலன்...

# மொழிமுன் முறிந்த கத்தி



ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

நள்ளிரவுப் பெருங்கனவதில்
பயணிக்கிறது பரபரத்துக்
கத்தியொன்று கூராக நேராக

கீழே விழுந்தன
காற்றின் கிழிசல் துண்டுகள்
வெயிலற்ற வெயிலில் மிதந்தபடி

கத்தி சிக்கிக்கொண்டது
இலைகளின் நரம்புகளில்
சிலவிடங்களில்

கத்தியின் வேகத்திறனின்
வியர்வை துடைத்தன பூக்கள்
அசைந்தசையாமல் சிரித்து

காற்றைக் கிழித்தக் கத்தி
களமாடும் வேகம் கூட்டியது
கர்வத் திமிர்த்திமில் நிமிர

கவிழ்ந்து தாழ்ந்து
மண் கிழித்தது
மரத்தின் கண்ணில்
கீறல் கோடிழுத்தது

கைப்பிடி இறுக்கத்துடன்
கவனமாய்ப் பறந்தது
மனிதக் கூட்டத்தின் பதம்பார்க்க

எடுத்த எடுப்பிலேயே
முனை முறிந்து
பிடி கழன்று
துண்டுகளாக விழுந்தது கத்தி
தாய்மொழித் துப்பிய குழந்தையின்
ஓரெழுத்தில் மோதி

இனவரசியலின் மூலத்தின் முனகல்
கத்தியின் கிழிந்த வாயில்

கடைவாய்ச் சிரிப்பொழுகக்
கடந்தது குழந்தை
கத்தியின் துண்டுகளின் கழுத்தை
நசுக்கியபடி
இடக்கால் சுண்டுவிரல் நகத்தில்

தாய்மொழியின் தாலாட்டுச் சத்தம்
போர்முரசமாய்க் கேட்டது தூரத்தில்

ரா.ராஜசேகர்...

# விற்கத் துணிந்த அரசியல்

சூரிய போர்வாளாய் கீறி இரத்தச் சுவடு
உடலில் வேதனை ரேகைகளைக் உண்டாக்கியது
ஒற்றை சுவாசத்தில் உருக்குலைந்து போனது
இளவெப்பத்தில் குளிர் காய்ந்து போகிறது
ஏதோ ஒரு இரவில் உதித்த கனவு.
பிடரியின் நீட்சியில் உடைந்து தொங்கிக்
கொண்டிருந்தது
ஒற்றைப் பூவின் முற்றத்து வாசம்.
ஏதோ ஒரு நாளில் சுவாசப் பையை நிரப்ப
மறக்கும்
மூச்சுக் குழலில் உதிர்ந்து போகும் உடல்கள்.
உடல் தீண்டும் விரல்களில் பூத்து தொங்கியது
பணம்
அங்கம் கூச வியாபித்திருந்தது அச்சம் இல்லாத
திமிர்
விரல்களுக்கு முத்தம் கொடுத்தது ஈரம் காயாத
உதடுகள்
உதடுகள் பதித்து ஈரத்தை பசைபோட்டு ஒட்டியது
மனிதம்
கூடுகள் கட்டிக்கொண்டது பணத்தின் வரவால்
பசியினைப் போக்கிக் கொண்டது விரல்களில்
உணவால்
எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓரினம்
எப்போதும் பணம் மட்டும் உலகத்தின் சமாதானம்
உயிர்களை கொன்று கொண்டே உணர்வுகளை
விற்று வந்தது
மொத்தத்தில் அரசியல் பணத்தின் அடிதளத்தில்
அழகாய் அமைந்து போனது ஜனநாயக வழியில்
எதையும் பெற்றுவிட விற்றுத்தான் தீர்க்க
வேண்டும்
உடலின் மீதான உள்ளத்தில் அரசியலை.!

கவின்முருகு...



ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்



ஓவியம் : கொ.வடிவேல்

பார்த்தாயா அதிசயத்தை.!
இந்தக் கடல்
உள் வாங்கும் போதெல்லாம்
நமது காதல் வெளி வாங்குகிறது..
நம்மை அம்மணப்படுத்திப் பார்க்க இந்தக்
கடலுக்குத்தான் எத்துணையாசை.?
நாம் அதனை நிர்வாணப் படுத்திப் பாடம்
கற்றுக் கொடுப்போம்..வா.. நான்
சங்குகளை எடுத்து
வெளியேப் போடுகிறேன்..
நீ பாசிகளையள்ளிகரையில்
வீசு..மீன்களையள்ளிப் போக வலைஞர்கள்
வருவர்..
நீலச் சேலையைத் துகிலுரிக்க சூரியனை
வேண்டுவோம்..
ஏன் மௌனமாகமிருக்கிறாய்.? பாவம்
கடல்..
விட்டு விடலாம் என்கிறாயா.? ஆமாம்,
பாவம்தான்..
நாளை அதன் முகத்தில்தான்
நாம் விழிக்க வேண்டும்.
அலை மடியில்தான் தலை நனைக்க
வேண்டும்..
ஆமாம், விட்டுவிடலாம்.!
ஆனால் நீ மட்டும்
இருக்க வேண்டும்..
இக் கடலோடும்
எம் கவியோடும்..

சூர்யநிலா...

# ஆறு பூதங்கள்!



ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

பூத்த மரங்களைக்
கதவுகளாக்கி அடைத்துக் கொண்டு
கருவேலம் திரண்ட நிலத்தைத் தின்றேன்
போன்சாய்க் காடு தொட்டியில் அடர்ந்தது!
பாறைப்படிவமான வரலாற்று ஊறுனியில்
நீரைத் தீர்த்தேன்.
ஜீவநதிகள் பாட்டிலில் பாய்ந்தன!

பட்சிகளின் பாதைகளில் ஏவுகணைகளேற்றி
காற்றைக் குடித்தேன்.
சிலிண்டர் மாட்டிக் கொண்டன முதுகுகள்!

சுட்டுப் புதைத்து எஞ்சிய நெருப்பை
குண்டுகள் செய்தபின் வயிறுகள் எரிந்தன!

செவ்வாய்க் கனவின் பயணவழியில்
வானம் அள்ளிப் பூசிக் கொண்டேன்.
ஓசோன் திரையில் விரிந்தது துன்பியல்
நாடகம்!

பலிபீடத்தின் உறையாத இரத்தம் தோய்த்து
ஆறாவது பூதமாய் மதத்தை அணிந்தேன்
கருவறைக்குள் ஓடி ஒளிந்துகொண்டது
கருணை!

இன்று
பூமிப் பந்தை திரும்பத் தரச்சொல்லி
குழந்தைகள்
அழுகின்றன
நான்
ஒரு கிலுகிலுப்பை பூதத்திற்காய்
வந்த வழியிலேயே காத்திருக்கிறேன்!

குறிஞ்சி நாடன்...

# எட்டு வழிச்சாலைக்கு எழுதப்பட்ட தீர்ப்பு

எட்டுப்பக்கமும்
நெறிக்கப்பட்டதால்
மூச்சுத்திணறி
பிணத்தைப்போலிருந்த நிலம்
நிறுத்தப்பட்டிருந்த மூச்சை
தீர்ப்பு வந்த திசை நோக்கி
மீண்டும் ஆழமாய்
இழுத்துவிடுகிறது....!
பல்லாயிரங்காலம்
மனிதர்களும் மாடுகளுமாய்
பழகிய நிலத்துக்கடியிலிருக்கும்
உளைச்சேறு...
இன்று
தன்பக்க நீதிக்காய் சாய்க்கப்பட்ட
துலாக்கோல் நோக்கி
இறுக்கம் தளர்த்தி
இளகுகிறது...
குனிந்துழைத்த மக்களின்
வாசத்தை நுகர்ந்தறிய
வாய்ப்பு இனி
வாய்க்காதோவென
களைகளால்
கண் மறைத்துக்கிடந்த பூமி
இன்று மீண்டும்
பழைய நிலைக்கு...!
துன்பத்தின் விழுதென
நிலத்தின்மேல் இறங்கிய
கண்ணீர் துளிகளால்
பிசையப்பட்டுக்கிடந்த
விளை நிலங்கள்...
இன்று
புன்னகையின்
நிறம் எழுதிக்கொள்கின்றன..!
நிலம் விழுந்து
புரண்டழுத மனங்களெல்லாம்
உகுத்த கண்ணீருக்கும்
வெடித்த
அழு குரலுக்கும்
கிடைத்திருக்கும் விடைக்கு
மனிதர்களுடன் சேர்ந்து
நன்றி சொல்கிறது நிலம்...
தொலைந்த குழந்தை
வருடம் கழித்து கிடைத்தத மகிழ்ச்சியில்
வயிறு நிறைந்த தாய்போல்..
பறிக்கப்பட்ட நிலம்
திரும்பப்பெற்றதில்
திக்குமுக்காடுகிறது
நிலம் சார்ந்த குடும்பங்கள்....!
ஆனால்
நிலம் கிடைத்ததில் நிம்மதி வந்தாலும்
புல்முளைத்த புதைமேட்டில் அமர்ந்தபடி
நேசித்த நிலம் பிரிய மனமின்றி
அன்று
தூக்கிட்டு மாண்டுபோன
கணவனுக்கு
அவன் நிலம் மீண்ட சேதியினை
எப்படிச் சொல்வதென்று
வழியேதும் தெரியாமல்
பிள்ளைகளை அணைத்தபடி
புழுங்கி அழுதுகொண்டிருக்கிறாள்
கிராமத்து தாயொருத்தி....!

சந்துரு...

ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்



ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

ஒரு மேசையை வடிவமைப்பதற்காக
பல தச்சர்களிடம் வினவினேன்
ஒருவர் ஒவ்வொரு காடுகளாக என்னை
அழைத்துச் சென்றார்
காடுகளின் ராஜ பரம்பரை மரங்களைக்
காண்பித்து
உறுதியின் தன்மையை
தூக்கி எடுத்து எனது மனக் குரங்கிடம்
ஒப்படைத்தார்
எனது மனக்குரங்கு கொப்புகளாகத்
தாவித் திரிந்தன
குட்டிகள் இறுகப் பிடித்துக் கொண்டன
ஒரு மேசைக்காக
என்னிடம் சேமிக்கப்பட்டிருந்த
கடதாசிகளில் மரங்களின் அழகை
குரங்குகளின் தாவுதல்களை
வரைந்துகொண்டிருக்கிறேன்
காடு மேசைகளுக்காக உருவாகவில்லை
காடு தச்சர்களுக்காக வளரவில்லை
காட்டின் இன்னொரு பக்கமிருந்து
மழை முகில் ஊடறுத்துச் சென்றது.

டீன்கபூர்...

# இறுதிச்சந்திப்பு

காதலை
கைவிடுவதாகச்சொல்லி
பிரிய நேர்ந்தது
அந்த இறுதிச்சந்திப்பில்...

இதயத்துடிப்பின்
இறுதி வேகத்தைத்தொட்டு
துடிதுடிக்கும்
முட்களாய் இருவரும்
விடைபெறும் வேளையில்
வினாக்களாய் நின்றோம்...

உதிர்ந்த வார்த்தைகளில்
உடல் முழுதும்
உறைந்த குருதியாய்
அவஸ்தைகள்

அந்த
இறுதிச்சொற்களை பரஸ்பரம்
விஷமென
விழுங்க நேர்கையில்
நிகழ்ந்தன
உள் நிகழும் மரணத்தை
உயிரோடு அவதானித்த
தருணங்கள்

கண்களை கடைசியாக
பார்த்த நொடிகளில்
நிகழ்ந்தது
ஒரு ஜென்ம பார்வைகளின்
ஒட்டு மொத்த தீண்டல்கள்...
பார்வைகள் பறிபோனதாய்
உணர்த்திக் கடந்தன
மறு கணங்கள்

எந்த வன்தீண்டலுமற்று
மலரொன்றிலிருந்து
அதன் வாசத்தைப் பறித்த
வார்த்தைகளின் பரிமாற்றத்தில்
பிரதியாய் மட்டும்
எஞ்சிப் போனது வாழ்க்கை.

அந்த
இறுதிக் கணத்தில்
சிறகுகள் பறிக்கப்பட்டு
செங்குத்தாய் நிலம் வீழ்ந்து
மரணிக்கும் பறவையென
வீழ்ந்து மரித்தது
நம் காதல்...

எனினும்
சாம்பலில் உயிர்த்தெழும்
பறவையாய்
சாகாமல் சிறகசைக்கிறது நினைவுகளில்
காதலெனும் சாம்பல் பறவை.

நிலாரவி...

ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்



ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

**என்** உணர்வுகள் முழுவதும் ஒட்டியே
கிடக்கின்றன உந்தன் பேரன்புகள்...

என் இறந்த கால இடிகளின்
வடுக்களை மாற்றும் மழை வரமாய்
உன்னையே நான் தேர்ந்தெடுத்து
வைத்திருக்கிறேன்...

என் இரத்தத்தை
உள்ளே காப்பாற்றிக் கொண்டிருக்கும்
வெள்ளை, சிவப்பணுக்களாய்
நீயே சுழன்று கொண்டிருக்கிறாய்...

என் இதய மாளிகையில் விரிக்கப்பட்ட
சிவப்புக் கம்பளமாய் நீயே என்னோடு
உறவாடிக்கொண்டிருக்கிறாய்...

நிகழ்கால மன அழுத்த வியாதியை
அகற்றும் எதிர்கால மருந்தாய் இனி
நீயே இருக்கப்போகிறாய் என்
அனுமதியோடு...

என் உரோமக் கால்களின்
உள்ளறைக்குள் சிலிர்க்கும் பொருளாய்
உன்னையே கட்டி வைத்திருக்கிறேன்
உனக்கே தெரியாமல்...

அதுசரி
என் உருவற்ற ஆன்மாவின்
கருப்பொருளே நீயாக இருக்கையில்...

காதலர் தினத்தன்று நான் பரிசோடு
வாழ்த்துச் சொல்லிக் கொடுக்காத
அந்த ஒற்றைத் தருணம்தானா
உனக்கு பெரிதாகப்போய்விட்டது?

மு இளையா...



**உன்** வார்த்தைகளால்
மலர்ந்த நான்தான்
இப்போது
பால்யம் திரும்புகிறேன்...

------

உன் வார்த்தைகள்
உணர்த்தாத
அர்த்தங்களை
மௌனம் படியெடுக்கிறது...

------

உன் வட்டத்திற்குள்தான்
என் வானம்
என் சூரியன்
என் நிலவு
என் நட்சத்திரங்கள்
என் காதல்
எல்லாம்...

என்னைத் தொடாது
உயரத்தில்
பறந்துகொண்டிருக்கும்
பறவை நீ...

-------

என்னைத்
தின்றுகொண்டிருக்கும்
இத்தனிமைக்கு
உன் பெயர் சூட்டியிருக்கிறேன்...

நம் காதல்தான்
கலவரம்போன்ற
பதட்டத்தில் இருக்கிறது...

-------

என் காதலைச்
சாம்பலாக்கிவிட்டாய்
அதனாலென்ன
என்னுயிர் ஆபரணமாக இருக்கிறது
நீ வாழும் என் காதல்
இப்போது உயிரெங்கும்...

-------

ஒரு தனிமை
ஒரு கூடு
ஒரு வாழ்க்கை
ஒரு பேரன்பு
ஒரு தெய்வீகம்
ஒரு தாய்மை
ஒரு அகாலம்
இப்போது
நீயற்ற கூட்டில்
என்னை நான்
எரிக்க
ஆயத்தமாகிறேன்...

**யாழ்ஜீவி...**

ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

# உன்னால் பூத்த முள்



தின்னம் கிள்ளி
வாய்க்குள் போடும் உன்னை
வண்ணம் கிள்ளி வார்த்தை
ஆக்குகிறேன்

உன்னோடு இருக்கையில்தான்
என்னோடு இருக்கிறேன்
நான்

அத்தனை அருகில் காணும்
கண்களில்
கொஞ்சம் உன் தேவதை
கொஞ்சம் என் சாத்தான்

நகம் வெட்டாத நாளில்
கைகள் மறைப்பாய்
காதல் காட்டிக் கொடுக்கும்

எல்லாப் பூக்களுக்கும்
உன்னைத் தெரிகிறது
உன்னால் பூத்த முள் எனக்கும்

வாய்க்குள் அடக்கி
வைத்திருக்கும் மாமாவை
நீ திறக்கையிலெல்லாம் நான்
ஆமாம் என்பது அனிச்சை

மேட்சுக்கு மேட்சாக ஆடை
அணிகையில்
அஞ்சு வயசு உன்னை
ஐந்தடியில் காண்கிறேன்

கழுத்தோரம் தேங்கி கிடக்கும்
உன் மொத்தத்தை மொய்த்தெடுக்க
ராத்திரி நேர காட்டுக்குத்தான் பயம்
எனக்கில்லை

நம் வழியெங்கும் கடக்கும்
மனிதர்கள்
அன்பால் செய்யப்பட்டவர்கள்
பாதி உனது மீதி எனது

உன் தக்காளி சாதத்தோடு
மனம் உப்பிக் கிடக்கும்
ஆம்லெட்டுக்கு சத்தியமாய்
நம் முத்த வாசம்

மடி சாய்ந்து கிடக்கையில்
பேருந்தேறி பிரிகையில்
நம் காதல் சிறு உலகம்
அதில் அப்பக்கம் நீ
இப்பக்கம் நான்...!

**கவிஜி...**

ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்



https://padaippu.com/kalvettu



ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

## தொடர்ந்து தோற்கும் புலிக்கடவுள்

பரந்த பாலைப் பகுதியில்
வெளிச்சம் ஊடுருவத் தயங்கும்
பாழடைந்த கல் மண்டபத்தில்
சுனை நீரின் சலனமற்ற
ஒழுக்கலென கசிகிறது
கொஞ்சம் ஒளி.

மழைக் காலத்தில் வழிந்திறங்கிய
நீரின் தடயங்களென
காய்ந்து போன பாசித் தடங்களில்
அங்கு வந்த காதலர்களின்
வருகைக் கையொப்பம்.

விதானப் பிளவுகளில்
பறவைகள் கைவிட்டகன்ற
காய்ந்த கூடுகளில்
நிரந்தரமாகத் தங்கி விடுகிறது
கருப்பையின் வாசம்.
வழக்கம்போல.

துண்டாடப்பட்ட தலை
சுவர் மூலையில்
கேட்பாரற்று கிடக்க
தலை இல்லாமல் பீடத்தில்
கம்பீரமாக கடவுள் வீற்றிருக்கும்
இருள் போர்த்திய கருவறையில்
நிறைந்து கிடக்கிறது
ஏராளமான ஏழைகளின்
பிரார்த்தனைகள்.

ஆடு மேய்க்கும் சிறுவன் ஒருவன்
சிறிய வழிபாட்டிற்குப் பிறகு
இடுப்பில் சுருட்டி வைத்திருந்த
பளிங்குக் கறகளை எடுத்து
மண்டபப் படிகட்டுகளில்
ஆடு புலி ஆட்டம் ஆட
கடவுளை அழைக்கிறான்.

கடவுளும் தன் தலையை
கைகளில் ஏந்திக்கொண்டு
கட்டங்களில் ஓடி, ஒளிந்து,
திறமையாக வெளியேறி
சிறுவனுடன் புலியாக விளையாட
பதிவாக வந்து விடுகிறார்

ஒரு ஆட்டினைக்கூட
பலியிடவிடாமல்
சிறுவனிடமே பத்திரமாக
அனுப்பி வைக்கிறார்
தொடர்ந்து தோற்றுக்கொண்டே
இருந்த அந்தப் புலிக் கடவுள்.

பிரேம பிரபா...



ஓவியம் : கொ.வடிவேல்

ஏதேதோ பெயர் சொல்கிறீர்கள்
நான் பறவை என்கிறேன்
ஏதேதோ பெயர் சொல்கிறீர்கள்
நான் மலர் என்கிறேன்
ஏதேதோ பெயர் சொல்கிறீர்கள்
நான் அன்பு என்கிறேன்

ஜி.சிவக்குமார்...

பசியோடு பார்க்கிறது மாடு
நிரம்பிய வயிறோடு
சோளக்காட்டுப் பொம்மை...

ஐ.தர்மசிங்...

சமநிலை
தண்டவாளங்களில்
தான் அத்தனை காதல்
தற்கொலைகளும்.

ஆனந்த்...



ஓவியம் : கொ.வடிவேல்

## தென்றலின்

இறுதி முத்தத்தை வாங்கிக்கொண்டு,
காற்று சுமந்து செல்லும் இறுதி
ஊர்வலத்தில்,
மண் சேரும் முன்
அறியாமல் என் கை சேர்ந்தது
அந்த அழகிய சருகு.

சற்றே உற்றுப் பார்த்தேன்.
மெல்லப் பேசத் தொடங்கியது
அஃதொரு பசுமை காலத்தின் புலம்பல்.

துளிராய் ஒரு சருகினை
உதைத்தே பிறந்தேன் ,
காற்று என் கதை சொன்னது,
வாழும் முறை சொன்னது...

வீட்டின் செல்லப்பிள்ளை.
அடர் மரத்துக் கிளை நரம்பில் ஜனனன்.
நிழல் மட்டும் அறிந்து வளர்ந்தேன்,
உச்சிக்குச் சென்று குடையும் விரித்தேன்.

தென்றல் என் தோழி வெய்யில் என்
தோழன்
நிழல் என் சோதரன் புயல் என் எதிரி
மழை என் காதலி, பனி என் துரோகி

இலையுதிர் காலத்தின்
மடிந்த கூட்டத்தில் நானில்லை
பனியின் துரோகத்தில்
கருகிய கூட்டத்திலும் நானில்லை

அனைத்தும் கண்டேன் முதுமை அண்டேன்
சாகா வரனாய் கர்வம் பெற்றேன் -
ஆனாலும்
சிறு துளிரின் உதையில்
கர்வம் தொலைந்து சருகானேன்

இனி மிச்சமுள்ளது
என்னை மண் சேர்த்திடு
வளர்த்த மரத்திற்கு உரமாக வேண்டும்.

மெல்ல விழுந்தது சருகு
என் கையில் எதுவும் இல்லை.

மு.முகமது ஃபாரூக்...

# போகுமிடம்.....

**இதழிடை** வெள்ளித் துணுக்கோடு சில
பிறப்புகள்
இழிவாய்க் குப்பைத் தொட்டிக்குள் சில..
வரையறையற்ற வாழ்வின் வறுமைக்குள்
சில..
உன்னதக் கருவறையில் உயிர்பெற்று
உதித்தாலும்
உலக மேடுபள்ளங்களில் உருட்டும்
வாழ்வு...

விதை விழுந்த இடமல்ல எப்படி
விளைந்தது என்பதே வினையின் காட்சி..
தொட்டிக்குள் பாதுகாப்பாய் வளர்வது
பெரிதா?
முட்டி மோதி விருட்சமாய் தழைத்தல்
சிறப்பா?

பூமிப் பட்டறையில் தட்டி நீட்டி
புத்துருவாக்கி புதிதாய்ப் பரிமளிக்கும்
புனர்ஜென்மங்கள்..
ஒட்டிய வயிறிலும் உறுதிகொள்ளும்
வைராக்கியங்கள்.
நிழலெனத் தொடரும் நிர்பந்தங்களில்
மீண்டு
நிலைநாட்டும் வெற்றிக் கொடிகள்.....

கனவுச் சாயங்களுக்கு நினைவு முலாம்பூசி
காலநேரமின்றிக் கடுமையாய் உழைத்துக்
கரைசேர்க்க
தன்னம்பிக்கையோடு தளராது பீடுநடை
போடும்
கண்ணியவான்களுக்கு போகுமிடம் வெகு
தூரமில்லை...

மதுரா...



ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்



ஓவியம் : கொ.வடிவேல்

**மனிதர்கள்** தொடாத
கரை ஓரத்தில்
ஓர் இதயத்தின் கண்ணீர்
கடலில் துளியாய்க் கலந்து
பாரம் நிறைந்து
வாய்விட்டு சொல்லவியலா
வேதனைகளின் கூடலில்
வெற்று வானத்தை நோக்கிய
வெறித்த பார்வையில்
விட்டுப்போன கனவுகளின்
தொடர்ச்சியாய் வந்த
கண்ணீர்த்துளிகளின்
ஈரம் வற்றிப்போன
கன்னங்களின் வழியே
உனது நினைவுகள்
உயிர்ப்பூக்கள் கருகியதுபோல்
ஒற்றை ஒற்றையாய்
வலுவிழந்த புயலாய்
மெல்ல கரையேறுகிறது!
விழுங்க இயலாத
உருண்டையாய்
உன் இயல்புகளின் வழியே
என்னை எரித்துக்கொண்டு
உயிர்க்கூடு சுமந்து
வெறுமனே நடந்து
எல்லையோரம் கடந்து
இன்னும் விட்டுப்போகாத
நேசத்தின் தீபத்தை
ஏற்றிப் பார்க்கிறேன்
வெளிச்சமில்லா தீபமாய்
மங்கிய ஒளியைத் தாங்கி
நடைபோடுகிறது வாழ்க்கை!
உந்தன் நினைவுகளுடனே!

மு.பெ.சத்தியநேசன்...

அம்மாவுக்கு வட்டச்
சொம்பு வெளக்குவதொன்றும்
அவ்வளவு கடினமாக இருக்கவில்லை
பள்ளத்தில் சீவிய கத்தாழையை
சதுரமாகத் தட்டி
கொஞ்சம் ஓட மண்ணில்
தெவட்டிக் கொள்வாள்
ஆக்கிச் சுரண்டிய போசிகளில்
அப்பியிருக்கும் கரியில்
பட்டுப்போன வேம்பு வாசம்
வந்து போகும்
பச்சை இலைகளில்
வாயாக இருக்கும்
கல்வாழை மலரின் இதழுக்கு
கரித்தண்ணியின் மூலக்கூறுகள் இருப்பதை
யாரும்
கூறாய்வு செய்ததில்லே.
சிலசமயம் பாலித்தீன் பைகள்கூட
அம்மாவின் கைகளில்
சிக்கி பலியாவதுண்டு.
மண்பூசிய சட்டி வானைகள்
கரியை
சுவீகரித்துக் கொள்வதுண்டு.
எங்கோ இருக்கும் உயர்தர
உணவகத்தில்
கருகிப்போன பாத்திரத்தில்
சமைத்ததை
நான் சாப்பிட்டதாக சொல்லிவிடாதீர்கள்
கரிகளுக்குள் இருக்கும்
அம்மாவின் உறக்கம்
நீரூற்றிக் கழுவதுபோல்
கலங்காமல்
இருக்கட்டும்

சே தண்டபாணி



ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

**எத்தனை** இரவுகள் வந்தாலும்
யாரோ கடத்தி விடுகிறார்கள்.
பகலின் நேசித்தலில் இப்போதெல்லாம்
தட்டாம்பூச்சிகள் இல்லாத வெறுமை.
அணில்களின் துள்ளல்கள் அடக்கப்பட்ட
மரங்களின் மரணங்கள்.
கரைகளை அடித்துச் செல்லும்
அலைகளுக்குப் பின்னால்
ஏதேதோ ரகசியங்கள்.
எல்லாம் தொலைந்து போன பிறகு
தேடித் தேடி ஓட
கிடைக்கும் எதுவும்
மனத்திற்குப் பிடித்தமானதாய் இல்லை
இப்போதெல்லாம்.

மீனு...



ஓவியம் : கொ.வடிவேல்

**உயர்ந்த** கட்டிடங்களும்
பல சரக்கு கடைகளும் திரையரங்கமும்
நிறைந்த இடங்களிலெல்லாம்
நின்று நின்று செல்கின்றன
பேருந்துகள்
நரிக்காடு சிங்கப்பேட்டை மானூரென....!!

ரமேஷ் கலை மித்ரன்...

# படைப்பு குழுமம்

பெருமையுடன் வழங்கும்

அம்மையார்

# ஹைறநூன்பீவி

## நினைவு பரிசுப்போட்டி

## 2019

நடுவர்:



வண்ணதாசன் (கல்யாண்ஜி)

பரிசு: 15,000 ரூபாய்

தலைப்பு:

# வேர்த்திரள்

(காடும் காடு சார்ந்த கவிதையும்)

**கவிதைப் போட்டி முடிவுகள் விரைவில்...**